மாநகர .. சி மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

கடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 04 ஞாயிற்றுக்கிழமை (16-02-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 81

# வடக்கில் இராணுவ நடவடிக்கை:

# ஜே. வி. பி. எதிர்ப்பு!

## மக்களுக்கு எதிராக யுத்தம் புரிவதால் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது

லண்டன், பெப்ரவரி 16

**வடக்கில் மேற்கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படும் இராணுவ நடவடிக்கைக்கு ஜே. வி. பி. எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறது. மக்களுக்கு எதிராக யுத்தம் புரிந்து பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்றும் ஜே. வி. பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்திருக்கிறார்.**

வெளிநாட்டில் மறைந்து வாழும் அவர் பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு பேட்டியளித்தார்.

வடக்கில் பெரும் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகக் கூறப்படுவது பற்றி அவரிடம் கேட்டபோது—

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண யுத்த நடவடிக்கை எடுப்பதை நாம் என்றுமே ஏற்றுக்கொள்ள முடியாது. மக்களுக்கு எதிராக யுத்தம் நடத்தி பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. மக்களை ஈழக் கோரிக்கைக்குத் தள்ளியதே அரசுதான். இந்த நிலையை நன்கு புரிந்துகொண்டால் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்— என்று பதிலளித்தார்.

மல்வத்த மகாநாயக்க தேரர் வடக்கே சென்று படையினருக்கு ஆசி வழங்கியது குறித்து கேட்டபோது—

இது மிகவும் விசனத்தை ஏற்படுத்தும் விடயமாகும். இந்நடவடிக்கை பௌத்த தர்மத்துக்கு உகந்ததா என்பதை அந்த மகாநாயக்கர் சிந்தித்துப் பார்ப்பது நல்லது — என்று அவர் பதிலளித்தார். [உ-10]

## செவ்வாய்க்குப் பின்னரும் ஊரடங்கு நீடிக்கப்படலாம்

### இராணுவ அதிகாரி தகவல்

கொழும்பு, பெப். 16

யாழ். குடா நாட்டில் அமுலில் இருக்கும் ஊரடங்கு உத்தரவு செவ்வாய்க்கிழமைக்குப் பின்னரும் நீடிக்கப்படும் வாய்ப்பு உண்டு என்று இராணுவ அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்ததாக ஏஜென்ஸிச் செய்திகள் தகவல் வெளியிட்டன.

குடாநாட்டில் நேற்றுக் காலை முதல் அமுலுக்கு வந்த ஊரடங்கு உத்தரவு தொடர்ந்து 3 நாட்களுக்கு நீடிக்கும் என அரசு அறிவித்திருந்தது தெரிந்ததே.

இதற்கிடையில்—

குடாநாட்டில் அமுலிலுள்ள ஊரடங்கு உத்தரவு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 6 மணியுடன் நீக்கப்படும் என்று நேற்று இலங்கை வானொலி அறிவித்தது. [ஓ-10-5]

## முஸ்லிம் அகதிகளுக்கு 6 மாதங்களுக்கு நிவாரணம்

அனுராதபுரம், புத்தளம், மாத்தளை, பொலன்னறுவை, குருநாகல், கொழும்பு ஆகிய ஆறு மாவட்டங்களில் தற்பொழுது தங்கியிருக்கும் முஸ்லிம் அகதிகளுக்கு மேலும் 6 மாதங்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும் என்று நேற்றுமுன்தினம் அரசு அறிவித்தது.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து சென்றுள்ள 75 ஆயிரம் அகதிகளுக்கே நிவாரணம் தொடர்ந்து வழங்கப்படவுள்ளதாக கொழும்புப் பத்திரிகைச்செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இவர்களுக்கு உலர் உணவை வழங்கும் பொறுப்பை ''உலர் உணவு திட்டப்பிரிவு'' ஏற்றுக்கொண்டுள்ளது என்று சமூக சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். [ஓ-5]

## எம்முடன் சேர்வதற்கு எத்தனை பேர் தயார்?

### புலிகள் பிரமுகர் கம்பன் விழாவில் கேள்வி

எது கையில் எடுப்பது என்பது எங்களுக்குத் தெரிகிறது!- அது கையில் எடுக்க எம்முடன் எத்தனை பேர் வருவீர்கள்?

இவ்வாறு கவிதையில் கேள்வி தொடுத்தார் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை.

கம்பன் விழாவின் இரண்டாம் நாள் மாலை நிகழ்ச்சியின் போது தலைமையுரையை கவிதையில் நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு கேள்வி தொடுத்தார்.

நல்லை ஆதீன மண்டபத்தில் நடந்த நேற்றைய நிகழ்ச்சிகளை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

விடுதலைப் புலிகள் ...

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வடக்கே துருப்புகள்

கொழும்பு, பெப். 16

யாழ். குடாநாட்டில் ஊரடங்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பெரும் எண்ணிக்கையான ஸ்ரீலங்காத் துருப்புகள் வடக்கு நோக்கி நகர்த்தப்படுகின்றனவாம்!

கொழும்புச் செய்திகளை மேற்கோள் காட்டி இந்திய வானொலி நேற்று இவ்வாறு அறிவித்தது. [உ-எ]

## பரீட்சை நடைபெற்றது

யாழ்ப்பாணம், பெப். 16

அரசாங்க சேவையில் உள்ள -எழுதுவினைஞர் வெற்றிடங்களுக்கு- ஆட்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை நேற்று நகரில் உள்ள 16 பரீட்சை நிலையங்களில் —ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்த போதிலும்— சுமுகமாக நடைபெற்றது. (உ-5)

## முச்சந்தி முரளி



இங்காலை வாரக்கணக்கிற்கு இழுத்தடிப்பு... அங்காலை மாதக் கணக்கில்லை இழுப்பு...

## வெற்றிலைக்கேணியில் கவச வாகனம் சேதம்

வெற்றிலைக்கேணியில் நேற்றுக் காலை கனரக வாகனங்கள் சகிதம் படையினர் முன்னேற முயன்றனர். அப்போது படையினரின் கவச வாகனம் (செயின் புளக்) ஒன்று கண்ணியில் சிக்கிச் சேதமானது. படையினருக்கு ஏற்பட்ட இழப்பு குறித்து தெரியவரவில்லை.

இச்சம்பவத்தை அடுத்து முகாம் திரும்பிய படையினர் கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களை நடத்தினர். கடற்பரப்பில் இருந்து பீரங்கித் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

இதேசமயம், புதிய 'சென்றி' ஒன்றை அமைத்துக் கொண்டிருந்த படையினர் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். இதில் சிப்பாய் ஒருவர் பலியானதாகவும்— ஏனையோர் ஓடித் தப்பிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஓ-15-117]

## கட்டுவனில் ஷெல் தாக்கு!

கட்டுவன் மினி முகாம் பகுதியில் இருந்து நேற்று அதிகாலை படையினர் ஷெல் தாக்குதல் நடத்தினர்.

அப்பகுதியில் மோதல் சம்பவம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் முத்தரசன் [சுந்தரலிங்கம் சுரேஷ்குமார்- யாழ்ப்பாணம்] என்ற போராளி வீரமரணமடைந்தார்.

இச்சம்பவம் நடைபெற்ற வேளை—

வளலாய், தொண்டமனாறு, கீரிமலை மற்றும் பூநகரி — கல்முனைப் பகுதிகளில் இருந்து பீரங்கித் தாக்குதலும்—

பலாலி, தச்சன்காடு, மாவிட்டபுரம் பகுதிகளில் இருந்து ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. [உ-5-15-131-165]

## சீனக்குடா குண்டு வெடிப்பு:

## விமான, ஹெலி சேதங்கள்; 166 கோடி ரூபாவுக்கு மேல்!

கொழும்பு, பெப். 16

சீனக்குடா விமானப்படைத் தளத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஹெலிகள், விமானங்கள் மற்றும் கட்டடங்கள் ஆகியவற்றுக்கு மட்டும் ஏற்பட்ட சேதம் 166 கோடி ரூபாவுக்கு மேல் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

வெடி மருந்துக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டுகள் மற்றும் உடைமைகளின் அழிவு மதிப்பு மேற்கண்ட 166 கோடி ரூபாவில் அடங்கவில்லை.

முழுமையாகச் சேதமுற்ற 'பெல்' ஹெலிக்கொப்டர்களின் பெறுமதி 16 கோடி ரூபா—

9 விமானங்களுக்கு ஏற்பட்ட சேதம் 50 கோடி ரூபாவுக்கு மேல்—

விமானத்தள கட்டடங்கள் மற்றும் பொதுமக்களின் கட்டடங்கள் ஆகியவற்றுக்கு ஏற்பட்ட சேதம் 100 கோடி ரூபாவுக்கும் மேல் — இவற்றுக்கு மட்டுமே 166 கோடி ரூபா சேதம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## உன்னிச்சை மோதலில் வீரமரணமடைந்த 12 பேர்

மட்டக்களப்பு உன்னிச்சை, 64 ஆம் கட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதலின்போது 12 வேங்கைகளும் களப்பலியானார்கள் என்பது தெரிந்ததே.

அவர்கள் விவரம் வருமாறு:-

மேஜர் லத்தீப், லெப்டினன்ட் கோசன், லெப்டினன்ட் கலாகரன், இரண்டாம் லெப்டினன்ட் மார்க்கோஸ், வீரவேங்கைகள் விஸ்வலிங்கம், றோகான், ஜெகநாதன், குணா, ஜாவீர், நிவாஸ்கர், டானியல், பழனி ஆகியோரே அந்த பன்னிரு போராளிகளும் ஆவர்.

இந்த தாக்குதலின்போது 16க்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்தனர் என்பதும், நவீன ஆயுதங்கள் பல புலிகளால் கைப்பற்றப்பட்டன என்பதும் தெரிந்தவையே. [ஓ-5]

## கிழக்கில் 8 தமிழர்கள் ஒரே நாளில் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், பெப். 16

கிழக்கில் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளில் கடந்த வியாழனன்று மட்டும் மொத்தம் எட்டுத் தமிழர்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொலையுண்டவர்களில் ஐவர் மட்டக்களப்பையும், மூவர் திருமலையையும் சேர்ந்தவர்கள் என்று கூறப்பட்டது.

அதேதினம் அம்பாறையில் உள்ள குடுமியாமலை என்னும் இடத்தில் உள்ள கிராமங்...

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணக்கு ஆய்வாளர் [Auditor] தேவை

பல்வேறு கிளைகளைக் கொண்ட நிறுவனம் ஒன்றுக்கு கணக்குகளைச் சரி பார்க்கக் கூடிய கணக்கு ஆய்வாளர் தேவை.

★ முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

★ கணக்குத் திட்டமிடலில் தகைமை வாய்ந்தவர்கள் விரும்பத்தக்ஈது.

இல. 385,
மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

[19747]

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 16

நீரிழிவு மற்றும் விசர்நாய்க்கடியினால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பான கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். மருந்தகத்தில் நடைபெறும். யாழ். சுகாதாரப் பணிப்பாளர் கருத்தரங்கிற்குத் தலைமை வகிப்பார்.

[இ-18]

## இன விரோத பிரசாரம்: நிலைமையை சிக்கலாக்கும்


### இப்படிக் கூறுகிறார் கணேசன்

அமைச்சர் தொண்டமான் முன் வைத்த சமரச தீர்வு பற்றி இரு தரப்பினரும் பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளக் கூடியவற்றை ஏற்றுக் கொண்டு நீக்க வேண்டியவற்றை நீக்கி விடலாம். அதை விடுத்து தொண்டமானுக்கு எதிராக பிரசாரம் மேற்கொள்வது போல தமிழருக்கு எதிராக இன விரோத உணர்வுகளைத் தூண்டி நிலைமையை மேலும் சிக்கலாக்கக் கூடாது.

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் வி. பி. கணேசன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-5)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 14 — 12 — 1937

மறைவு: 15 — 01 — 1992

அமரர்

**சங்கரப்பிள்ளை பூபாலசிங்கம்**

(முன்னாள் யாழ். மாவட்டசபை உறுப்பினர்)

எங்கள் குடும்பத்தின் பெருமிதமே!
வட்டுக்கோட்டை தந்த பெருமகனே!
தங்கள் நினைவுகள் என்றும்-
எம் மனதில் நிலைத்து நிற்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கிறோம்:

சகோதர, சகோதரிகள், உறவினர்கள்.

வட்டுக்கோட்டை. (19736)

## நல்லூரில் சுகாதார வாரம்

தொற்று நோய்களைக் தடுப்பதன் அவசியத்தை மக்களிடையே வற்புறுத்தும் நோக்குடன் நாளை திங்கட்கிழமை முதல் 23ஆம் திகதி வரை சுகாதார வாரம் கொண்டாட நல்லூர் பிரதேச சபை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த வாரத்தில் பொது இடங்கள், வீதிகள், மயானங்கள், வாய்க்கால்கள், தனிப்பட்ட காணிகள் ஆகியவற்றைத் துப்புரவு செய்தல், வீடு வீடாக சுகாதார அறிவுரை வழங்கல், கிணறுகளுக்கு குளோரின் இடுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

பொது அமைப்புக்கள் இந்தப் பணிகளில் ஈடுபடுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

[உ-3]

## அப்பா உங்கள் கதை வளரும்!



அமரர்

**க. நாகலிங்கம்**

(இளைப்பாறிய ஆசிரியர்,
'நகுலகிரி' மயிலிட்டி
தெற்கு, தெல்லிப்பளை)

கதையாகியது:
29 — 02 — 1988

நினைவுத் திதி:
16 — 02 — 1992

நான்கு ஆண்டுகள் போயின
நினைவுகள் அன்று போல் கனக்கின்றன,
அப்பா உங்கள் கனவுகள் நனவாகின்றன,
புதிய புதிய உயர்வுகள், உறவுகள்,
உங்கள் ஆசியுடன் உங்கள் கதை வளரும்!

அன்பு மனைவி: நகுலேஸ்வரி,
மகன்: சண்முகலிங்கன், மருமகள்: கௌரி,
மகள்: காந்தா, பிள்ளை: மனோ.

5, இராச வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். [19743]

## வவுனியாவில் சிங்களக் குடியேற்றம்

வவுனியா நகரின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள தேக்கங் காடு, தோணிக்கல் ஆகிய இரு கிராமங்களில் வாழும் தமிழ் மக்கள் அங்கிருந்து விரட்டப்பட்டு, அப்பகுதியில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஒ-5)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் ஏ. தியாகராஜா**

[சுமதி பொற் தொழிற்சாலை உரிமையாளர்]

தோற்றம்: 12 — 01 — 1932

மறைவு: 29 — 02 — 1988

திதி: 16 — 02 — 1992

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்,
உற்றார், [illegible], நண்பர்கள்.

கலை அரசி,
மீசாலை வடக்கு, கொடிகாமம். (19740)

## கேள்வி அறிவித்தல்

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை.**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் திருநெல்வேலி பிரதான உணவகம், பாலசிங்கம் விடுதி உணவகம் ஆகியவற்றை நடத்துவதற்காக இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரினால் 1992-02-28 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் தனித்தனியாக ஏற்றுக் கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 500/-ம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50/-ம் ஒவ்வொரு உணவகத்திற்கும் தனித்தனியாக பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்துக் கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களைக் காரியாலய நேரங்களில் எம்மிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

— பதிவாளர்.

14-2-92.

[சி-1515]

## யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

## மாணவர்களுக்கு அறிவித்தல்



**அதி. வண, கலாநிதி எஸ். குலேந்திரன்**

தோற்றம்: 23 - 9 - 1900

மறைவு: 14 - 2 - 1992

யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவனும், அதன் இயக்குனர் சபையின் நீண்டகால உறுப்பினனும், ''யாழ்ப்பாணக் கல்லூரியின் வரலாறு'' என்ற நூலின் ஆசிரியனுமாகிய, நமது பாசத்திற்குரிய முன்னாள் பிஷப் சென்ற வெள்ளிக்கிழமை மறைந்து விட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 17-2-92 திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கு பேராலயத்தில் நடைபெறும். மாணவ, மாணவிகள் அன்று காலை 7-30 மணிக்கு கல்லூரி வளாகத்தில் வந்து கூடுமாறு கேட்கப்படுகின்றனர்.

— அதிபர்

யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை. [சி-1519]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் ஐக்கியத்தை பேணுவதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கம்

## ஜனாதிபதி பிரேமதாஸா உரை

கொழும்பு, பெப். 16

'நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாக்கும் திட்டங்களை நிறைவேற்ற சகல சமூகத்தவர்களின் ஆதரவும் பெறப்படும்.'

வாரியப்பொல தேர்தல் தொகுதியில் அமைக்கப்பட்ட மறுமலர்ச்சிக் கிராமம் ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் ஐக்கியத்தைப் பேணுவதே அரசின் முக்கிய நோக்கம். இந்தக் கொள்கையில் மாற்றம் எதுவும் ஏற்பட இடமளிக்கப்படமாட்டாது.

நாட்டில் பிரச்சினைகளை உருவாக்க ஒரு சிலர் முயன்றாலும், நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாக்க சிங்கள தமிழ், முஸ்லீம் மக்கள் தம்மை அர்ப்பணித்துள்ளனர். நாடு பிளவுபடுவதை அவர்கள் இதன் மூலம் எதிர்த்திருக்கிறார்கள்.

சிறுபான்மை சமூகத்தினர் பிறத்தியார் என்று கருதப்பட்டமையால் அவர்கள் தனி நாடு கோரும் எண்ணம் உருவாகியது. இந்த நிலைவரத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டு அரசு செயற்படுகிறது.

இவ்வாறு ஜனாதிபதி தமது உரையில் மேலும் தெரிவித்தார். [த-5]

## 12 அரச தோட்டங்கள் பொலீஸ் கண்காணிப்பில்

காவத்தைப்பகுதியில் உள்ள 12 அரசாங்கத் தோட்டங்கள் பொலீஸாரின் கடும் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் வெளியிடங்களைச் சேர்ந்த 20 பேர் அண்மையில் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்தே காவத்தைப் பகுதியில் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-5)

## 'ஜெய்ன்' விசாரணைக் குழு: பதவிக் காலம் நீடிப்பு

புதுடில்லி, பெப். 16

ராஜீவ் காந்தி படுகொலை தொடர்பான எல்லா உண்மைகளையும், சம்பவங்களையும், சூழ்நிலைகளையும் விசாரிக்கும் நீதிபதி திரு. என்.சி. ஜெய்ன் விசாரணைக் குழுவின் பதவிக்காலம் எதிர் வரும் ஆகஸ்ட் மாதம் வரை நீடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வர்மா விசாரணைக் குழுவின் வரம்புக்குள் இடம் பெறாத அனைத்து அம்சங்களையும்ஜெய்ன் விசாரணைக் குழு விசாரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (த-5)

## டாக்டர்களுக்கு நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், பெப். 16

நாட்டில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் உள்ளகப் பயிற்சியை முடித்த டாக்டர்களுக்கு எதிர்வரும் முதலாம் திகதி முதல் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் சுகாதார அமைச்சுக்கு அனுப்பப்பட வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது.

ஆனால் அதற்கான விவரங்கள் அடங்கிய கடிதம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு 11ஆம் திகதியே வந்து சேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனாலும் இப்போதும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. [அ-3]

### யாழ். மாவட்டத்தில்

## ஓய்வூதிய பணிக்கொடை 2,000 பேருக்கு வந்தது

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ். மாவட்டத்தில் சுய விருப்பத்தின் பேரில் ஓய்வு பெற்ற 2 ஆயிரத்து 500 பேரில் இரண்டாயிரம் பேருக்கான ஓய்வூதிய பணிக்கொடை யாழ். செயலகத்துக்குக் கிடைத்திருப்பதாக செயலக ஓய்வூதியக் கிளை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

## அரசியலில் மதம் கலப்பதை காமினி விரும்பவில்லையாம்

கொழும்பு, பெப். 16

அரசியலில் மதத்தைக் கலக்க ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி விரும்பவில்லை என்று முன்னணியின் தலைவர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா தெரிவித்தார்.

தேர்தல் ஆணையாளரால் அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்னர் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தனது முதலாவது மத நிகழ்ச்சியை கடந்த திட்கட்கிழமை அனுராதபுரம் ஸ்ரீமகாபோதி விகாரையில் நடத்தியது.

எளிமையான முறையில் மத நிகழ்ச்சியை நடத்தியது பற்றி செய்தியாளர்களிடம் விளக்குகையில், திரு. திஸநாயக்கா முன்கண்டவாறு கூறினார்.

''பெரிய அளவில் மத நிகழ்ச்சிகளை நடத்தி மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்த நாம் விரும்பவில்லை'' — என்று முன்னாள் அமைச்சர் லலித்அத்துலத்முதலி செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (உ-எ)

## ஜனாதிபதி புஷ் மீண்டும் போட்டியிடுவார்

வாஷிங்டன், பெப். 16

மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாகத் திரு. ஜோர்ஜ் புஷ் கடந்த புதன்கிழமை உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் பதவிக்காலம் இவ்வாண்டுடன் முடிவடைகின்றது.

இதேவேளை- வளைகுடாப் போரின் போது திரு. புஷ்ஷின் செல்வாக்கு அமெரிக்க மக்களிடையே 90 சத வீதமாக அதிகரித்திருந்தது. இப்போது அது 45 சத வீதமாகக் குறைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (த-எ)


## மருத்துவக் கல்வி

(ஜேர்மன் மருத்துவம்)

**Doctor of Homoeopathic Medicine & Surgery**

**(D. H. M. S.)**

தகைமை: க. பொ. த. (உயர்தரம்)

மருத்துவ சங்கத்தின் பரீட்சையும், பதிவும் தொழில் அனுமதியும்.

(மாவீரர், போராளிகள் குடும்பத்தவர்க்கு இலவசக் கல்வி)

**19 — 02 — 1992 இல் ஆரம்பம்**

விவரங்களுக்கு:

வைத்திய கலாநிதி V.P. சுந்தரராஜன்,
அதிபர்,
சாயி மருத்துவக் கல்லூரி,
இல. 6, பருத்தித்துறை வீதி,
[1ஆம் ஒழுங்கை,] யாழ்நகர்.

(சி-1496)



போஷாக்கு நிறைந்தது

## ஜீவாகாரம்

இது முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட ஓர் உபஉணவாகும். இதில் 100 கி. மாவில் 16·5 கி. புரதமும், 400 கி. கலோரி சக்தியும் அடங்கி உள்ளது. தேவையான விட்டமின்களும் மினறல்களும் அடங்கியுள்ளன.

இன்றைய விலை கிலோ ரூபா 49/

கிடைக்குமிடம்:-

அண்ணா கோப்பிக் கடை, யாழ்ப்பாணம்.

[சி/1511]


## நல்லூர் கம்பன் விழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், பெப். 16

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழாவின் மூன்றாம் நாளான இன்று காலை நிகழ்ச்சியில் வழக்காடு மன்றமும், மாலை நிகழ்ச்சியில் இளைஞர் அரங்கு நாடக அரங்கு ஆகியவையும் நடைபெறும்.

காலை 9-30 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும் நிகழ்ச்சிக்கு காலநிதி இ. பாலசுந்தரம் தலைமை வகிப்பார். திரு. சி. முருகவேள் தொடக்கவுரை நிகழ்த்துவார்.

''வாலிவதை நீதிக்குப் புறம்பானது'' என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் இடம் பெறும். வழக்குத் தொடுநர்களாக திரு.. செ, சுந்தரம் பிள்ளை, திரு. சி. சிவலிங்கராஜா, திரு. சிவகுமாரன் ஆகியோரும் எதிர் வழக்காடுவோர்களாக திரு. சோ. பத்மநாதன், திரு.க. நாகேஸ்வரன், திரு. இரா. செல்வவடிவேல் ஆகியோர் பங்கேற்பார்கள். திரு. இ. ஜெயராஜ் நீதிபதியாகக் கடமை புரிவார்.

மாலை நிகழ்ச்சிகள் பிரபல நாதஸ்வர தவில் வித்துவான்களின் மங்கள இசையுடன் மாலை 4-30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் ஆரம்பமாகும். குழந்தை ம சண்முகலிங்கம் தலைமைவகிப்பார். பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் தொடக்கவுரையாற்றுவார்.

''காகுத்தன் பெருமைக்குக் கைகொடுத்தோர்'' என்ற தலைப்பில் இளைஞர் கருத்தரங்கு திரு. மா. வேதநாதன் தலைமையில் நடைபெறும். திருவாளர்கள் டி. நிஸங்க, ஸ்ரீ பிரசாந்தன், பா. சபேசன், வே. ஜெகரூபன், ஆ. திருமுருகன், செல்விகள் க. பாமா, த. நாமகள் ஆகியோர் இதில் பங்கேற்பர்.

''இன்று சந்திக்கும் இவர்கள்'' என்ற தலைப்பில் நாடக அரங்கு இடம்பெறும். இதில் திருவாளர்கள் சி. கணபதிப்பிள்ளை, இ. சிவானந்தன், சி. குமாரசாமி, இ. முருகையன், எஸ். கணபதிப்பிள்ளை, எஸ். ரி. அரசு, காரை. செ. சுந்தரம்பிள்ளை, சோ. பத்மநாதன், த. கலாமணி, சி. சிவலிங்கராஜா ஆகியோர் பங்குபற்றுவர். சந்திக்க வைப்பவர் கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை. (த)

## 'ராக்கிங்'கில் ஈடுபட்ட 21பேர் இடை நிறுத்தம்

கொழும்பு, பெப். 16

மருதானை தொழில் நுட்பக் கல்லூரியில் மிருகத்தனமான ராக்கிங் நடவடிக்கையில் ஈடுபட்டதாகச் சொல்லப்படும் 21 சிரேஷ்ட மாணவர்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் 800 சிரேஷ்டமாணவர்களுக்கான விரிவுரைகள் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

தொழில் நுட்பக் கல்லூரியில் புதிதாக சேர்ந்து கொண்ட மாணவர்களை ராக்கிங் செய்த குற்றச் சாட்டின் பேரிலேயே இந் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக கொழும்பு கல்வி அலுவலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-5)

## அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ். பல்கலைக்கழக பாதுகாப்பு ஊழியர்களுக்கான சீருடைத் துணிகளை கொழும்பில் இருந்து எடுத்து வர கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி மறுத்துள்ளது.


52 ஊழியர்களுக்கு 500 மீற்றர் துணி எடுத்து வர அனுமதி கோரப்பட்டிருந்தது. [உ-3]

## சான்றிழ் வைபவம்

யாழ்ப்பாணம், பெப். 16

வடமராட்சி சுருக்கெழுத்து கழகத்தினரின் சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறும். (த)

## 51 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி

**சீதாலச்சுமி செல்லையா**

[இளைப்பாறிய தபாலதிபர், திரு. நா. செல்லையாவின் அன்பு மகள்]

எங்கள் அன்புச் சகோதரியே! எங்கள் குடும்ப கோவிலிலே ஒளி வீசி இறைவன் பாத நிழல் அடைந்த எங்கள் அன்பு சகோதரியே! எங்கள் இல்லத்தின் ஒளி அகன்று விட்டது. நாங்கள் செவிமடுத்து, மகிழ்ந்த இனிய குரல் ஓய்ந்து விட்டது. ஒரு நிமிடமேனும் எங்களையும், உமது ஆசைத் தம்பியையும், அண்ணையையும் பிரிந்திருக்க மாட்டீர்களே! அன்பே, வடிவான எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் புன்னகை தவழும் பொன்னான அழகு முகத்தையும், உங்கள் பண்பான குணத்தையும் இனி எங்கு காண்போம்.

ஊரார் போற்ற, உற்றார் வாழ்த்த, உத்தமியாய் வாழ்ந்தீர்களே! என்றும் எங்களுக்கு வழிகாட்டியாக இருப்பீர்கள் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து உங்கள் ஆத்மா சாந்தி அடையும் வண்ணம் பிரார்த்திக்கும்;

அன்புச் சகோதரர்கள்,
சகோதரிகள், அண்ணி, மருமகள்.

''லச்சுமி கிரி''
மானிப்பாய்.

[19717]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. பூச்சி நீக்கியது. தொடர்பு பொ. தில்லைராசா, இலக்கம் 55, 3 ஆம் கட்டை, பருத்தித் துறை வீதி, கல்வியன்காடு. [19727]

முச்சக்கர வண்டி (Wheel Chair) விற்பனைக்குண்டு. தொடர்பு: சாள்ஸ் ரஞ்சித், இந்திரபவனம், மான் கல்லூரி ஒழுங்கை, உடுவில். [5046]

இரண்டு அல்சேஷன் பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. (பத்துக் கிழமை) T. விசுவநாதன் பத்மாசனம் மாரியம்மன் ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு. (19737)

## தேவை

Bottling Machines தேவை. கடித மூலம். தொடர்பு கொள்ளவும். க. கிருஷ்ண பிள்ளை, 35/3, கொழும்புத் துறை வீதி, சுண்டிக்குளி. [சி-1606]

பெண்கள், சிறுவர், சிறுமியர்க்கான ஆடைகளை வெட்டித் தைக்கத் தெரிந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். வினோபா ரேட் சென்ரர், 42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [எழிலகம் முன்பாக] [19705]

## மணமகன் தேவை

யாழ். இந்து, செவ்வாய்க் குற்றமற்ற 31 வயது ஆசிரியைக்கு உள்நாட்டு மணமகனை அல்லது கனடாவில் உள்ள மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். நட்சத்திரம் பூரட்டாதி, 3 ஆம் கால். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [19694]

## மணமகள் தேவை

சுவிற்சர்லாந்தில் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் நல்லொழுக்கமுள்ள, படித்த, இந்து மதத்தைச் சேர்ந்த 35 வயது நிரம்பிய வாலிபருக்கு 31 வயதிற்குட்பட்ட மணப்பெண் தேவை. ஜாதகக் குறிப்பு விலாசத்துடன் விண்ணப்பிக்கவும். சீதனம் அதிகம் எதிர்பார்க்கப்பட மாட்டாது. 383, C/o உதயன், யாழ்ப்பாணம். [19725]

சுவிற்சர்லாந்தில் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் நல்லொழுக்கமுள்ள, படித்த, இந்து மதத்தைச் சேர்ந்த 27 வயது நிரம்பிய வாலிபருக்கு மணப்பெண் தேவை. ஜாதகக் குறிப்பு விலாசத்துடன் விண்ணப்பிக்கவும். சீதனம் எதிர் பார்க்கப்படும். 384, C/o உதயன், யாழ்ப்பாணம். [19726]

## ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும், பியூடோ, 39/17, மின்சார நிலையவீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி-1462]

## சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். ''சக்தி சரவணா'', 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக) தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. (5045)

## சோதிடம்

உங்கள் சோதிட ஆன்மீக ஜாதக பரிவர்த்தனை தேவைக்கு பகல் 10 மணி முதல் 1 மணி வரை சந்திக்கலாம். மணி மந்திர சோதிடம், Bhrama Sri Sivarajah Kurukkal, No 7, Kanakasabai Lane, Sivalinga Puliady, Jaffna. (19742)

## வினாத்தாள் (ஆண்டு - 6, 5, 4)

புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் (தமிழ், கணிதம்) ஆண்டு 6, 16 - 02 - 1992 உம் ஆண்டு 5, 23 - 02 - 1992 உம் ஆண்டு 4 01 - 03 - 1992 ஞாயிறும் வெளியிடப்படும். முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [19720]

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் நாகமுத்து மயில்வாகனம்

மண்ணில்: 09 — 01 — 1897

விண்ணில்: 17 — 01 — 1992

அன்பின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய், பாசத்தின் ஒளி விளக்காய், எம் குடும்பத்தின் சுடராகத் திகழ்ந்த எம் தந்தையே! நீவீர் எம்மை விட்டுப் பிரிந்து மாதம் ஒன்றாயினும், எம் மனத்திரையை விட்டு அகலாது அமர்ந்து விட்டீரே! என்றென்றும் உமது ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கும்.

அருமை மகன், இளைய மகள், குடும்பத்தினர்.

பழைய விதானையார் இல்லம்,
சண்டிலிப்பாய் தெற்கு,
சண்டிலிப்பாய். [19716]

# 7ஆவது பிறந்த ஆண்டு நினைவு



## செல்வன் பிறேமகீதன் ஶ்ரீரஞ்சன்

இகலோகம்: 16 — 02 — 1985

பரலோகம்: 01 — 06 — 1989

எம்முடை பாட்டாக நீ இருந்தும்
பாடிட எம்மாலே முடியவில்லை!
எம்முடை ஏடாக நீ இருந்தும்
எழுதிட எம்மாலே முடியவில்லை!
எம்முடை மூச்சாக நீ இருந்தும்
மூச்சினை எடுத்திட முடியவில்லை!
இன்று நீ எம்முடை நிழலாகினாய்!
கீதன்! நாம் நடக்கிறோம் உன் நிழலில்.

என்றும் உன்னை மறவாத:

அப்பா, அம்மா, அன்புத் தங்கை திவ்வியா,
அம்மப்பா, அம்மம்மா, பாலா மாமா,
சீலன்மாமா,

75, [புதிய இல. [illegible]],
அரசடி வீதி, யாழ்ப்பாணம். [5040]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## திருமதி குழந்தைவேலு சின்னம்மா

தோற்றம்: 17 — 06 — 1911

மறைவு: 17 — 01 — 1992

எங்களெல்லோரையும் வாழவைத்த அன்புத் தாயின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (16 - 02 - 1992) ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ள அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையிலும், வீட்டுக்கிருத்தியத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்.

''பொன் வாசா''
11/5, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். [19644]

# ஓராண்டு நினைவஞ்சலி



## வசந்தி திருவிளங்கம் (விஜி)

மலர்வு; 02 — 08 — 1968

உதிர்வு; 26 — 02 — 1991

திதி: 16 — 02 — 1992

வானக வாழ்வினர் வாவென் றழைத்திடப்
போயினை யோஅப் பொன்னுல காள்வதற்கு?

— குடும்பத்தினர்.

சாஸ்திரியார் ஒழுங்கை,
தும்பளை,
பருத்தித்துறை. [5042]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### வெற்றிக்கு வழி

நான்கு நாள் கம்பன் பெருவிழாவின் முதல் நாளன்று, தொடக்க உரை நிகழ்த்திய யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தெரிவித்த கருத்து இன்றைய சூழ்நிலைக்குப் பொருத்தமான ஆலோசனை.

போர் மேகம் சூழ்ந்துள்ள நிலையில், மக்களின் உளநிலையைப் பாதிக்கக்கூடிய நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. ஆகையால் மக்கள் உளநிலை பாதிக்கப்பட்டு மனச்சோர்வு அடையும் நிலை உருவாக இடமளிக்கக் கூடாது. அதன் பொருட்டு வழமைபோல விழாக்கள் நடத்தப்பட வேண்டும். பாடசாலைகள், பல்கலைக்கழகங்களில் கல்வி போதனை நடக்க வேண்டும். அலுவலகங்கள், சேவை நிலையங்கள் திறக்கப்பட்டு மக்களுக்குரிய சேவைகள்ச் செய்ய வேண்டும். வழமை நிலை பேணப்பட வேண்டும். — இது வே துணை வேந்தரது அர்த்தமுள்ள ஆலோசனை.

போரினால் அரசு வெறும் உயிர், உடைமைச் சேதங்களை மட்டும் உண்டாக்கவில்லை. பொருளாதாரத் தடை மற்றும் கல்வி, தொழில் உட்பட்ட சகலவிதமான வாழ்க்கை வசதிகளுக்கும் தடை விதித்து மக்களை உடல் — உளவியல் ரீதியாக பாதிப்புறச் செய்ய முயற்சித்து வருகிறது. அதன் பொருட்டுத் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது.

உரிமைப் போராட்டம் நடத்தும் மக்களை உளச்சோர்வடையச் செய்தால், அவர்களை அதன் மூலம் இலகுவில் வென்று விடலாம் என்ற தத்துவத்துடன் அது கச்சிதமாகச் செயலாற்றி வருகிறது.

அதாவது இராணுவ நடவடிக்கை மட்டுமன்றி அரசின் ஏனைய செயற்பாடுகளும் தமிழர்களின் விடுதலைப் போராட்ட எழுச்சிக்கு எதிராக ஏவி விடப்பட்ட கணைகள் என்பதை மறந்துவிடக் கூடாது. ஒவ்வொரு தமிழனும் அதனை பெரும் சவாலாகக் கருதி. எதிர்கொள்வது அவசியமாகும்.

போர் தொடரும் என்று தெரிந்தும் நாம் அஞ்சி நடுங்கி, வாழ்க்கையை அடக்கிக் கொள்ளலாமா? எத்தனை நாட்களுக்கு அவ்வாறு இருக்க முடியும்? மனித வாழ்க்கையே போராட்டம் தான். கஷ்டங்கள், வேதனைகள், துன்பங்கள் யாவும் வாழ்க்கையின் அங்கங்கள். அவற்றை எதிர்கொண்டு எழுந்து நின்று. துணிந்து செயற்படுவது தான் வாழ்க்கை.

ஆகவே போர் மேகம் சூழ்கிறதே என்று மனம் ஒடுங்கி வழமை நிலையைப் புறந்தள்ளப் புறப்படலாகாது. மக்கள் வாழ்க்கைக்கு, வழமை நிலைக்குத் தேவையான சகல செயற்பாடுகளும் நடைபெற்றே ஆகவேண்டும். பாதிப்புகளைக் கண்டு பதுங்கி இருக்க நினைக்கக் கூடாது.

எந்தச் சவாலையும் எதிர்கொள்ளும் சக்தி படைத்தவன் தமிழன் என்ற நிலை உருவாக்கப்பட வேண்டும். அவர்கள் சாவின் மத்தியிலும் வாழ்வார்கள்; மன உறுதியுடன் எழுந்து நிற்பார்கள்; துணிந்து செயற்படுவாங்கள் என்ற முத்திரை பதிக்கப்பட்டால் எதிரியும் களைத்துவிட நேரும்.

தமிழனைப் பலவீனமாக்க முடியாது என்று கண்டால் தானே வழிக்கு வருவதைவிட எதிரிக்கு வேறு எந்த மார்க்கம் இருக்க முடியும்?

எனவே துணைவேந்தரின் கருத்து தமிழர் நெஞ்சங்களில் பதிந்து செயலாகப் பரிணமிக்க வேண்டும். அப்போது வெற்றி எங்கள் பக்கமே நிச்சயமாகிவிடும்.

---

## சர்ச்சைக்குரிய காவிரி நீர் விவகாரம்:

# புதுடில்லி 'சதுரங்க'ப் போட்டியில் ஜெயலலிதாவுக்கு வெற்றி கிட்டுமா?

### திரிசங்கு நிலையில் நரசிம்மராவ்

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு அரசியலில் சவாலாக உள்ள பல விவகாரங்களில் காவிரி நீர் தகராறும் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தத் தகராறு தமிழகத்துக்கும் கர்நாடகத்துக்கும் இடையே உள்ள பிரச்சினை மட்டும் அல்ல. இந்திய அரசியலையே— ஆட்சியையே குழப்பத்தில் இழுத்து விட்டிருக்கும் விவகாரம்.

ஏன், காங்கிரஸினதும் பிரதமர் நரசிம்மராவினதும் 'தலைவிதி' கூட இந்த விவகாரத்தோடு மிக நெருங்கி உள்ளதாகத் தெரிகிறது.

**300 ஆண்டுகளுக்கு முன்**

இந்திய அரசியலையே உலுக்கிக்கொண்டிருக்கும் இந்தப் பிரச்சினை இன்று நேற்று ஏற்பட்டதல்ல.

கடந்த சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் திருச்சியைத் தலைநகராகக் கொண்டு ராணி மங்கம்மா என்ற வீரப் பெண் ஆட்சி நடத்திக்கொண்டிருந்தார். அதே காலத்தில் மைசூரை சிக்க தேவராயன் என்ற மன்னன் ஆண்டுகொண்டிருந்தான்.

அந்தச் சமயத்தில் காவிரியில் திடீரென தண்ணீர் வரவில்லை என திருச்சி—தஞ்சை உழவர்கள் மங்கம்மாவிடம் முறையிட்டனர். காவிரியின் குறுக்கே சிக்க தேவராயன் அணை கட்டிவிட்டதால், தண்ணீர் தடைப்பட்டு விட்டது என ஒற்றர்கள் மூலம் அறிந்து சீறி எழுந்தாள் மங்கம்மா. ''அணையை உடைத்து காவிரியை விடுவியுங்கள்'' என்று ஆணையிட்டாள். தமிழ் நாட்டு வீரர்கள் திரண்டு, மைசூரை நோக்கி படையெடுத்துச் சென்றனர்.

வீரர்கள் மைசூர் போய்ச் சேருமுன் அங்கே இரவு பகலாக பலத்த மழை பெய்தது. வெள்ளம் பெருக்கெடுத்து அணையையும் உடைத்துவிட்டது. இதனால் அவர்கள் இடைவழியிலேயே திரும்பி விட்டனர். அந்த சிக்க தேவராயன் அணை கட்டிய அதே இடத்தில் தான் இப்பொழுது ''கண்ணம்பாடி அணை'' கட்டப்பட்டு வருகிறது.

இந்த அணைக்கட்டு தான் தமிழகத்துக்கும் கர்நாடகத்துக்கும் இடையே எழுந்துள்ள பயங்கர பூதாகார நிலைமைக்குக் காரணமாகும்.

பொங்கியெழும் காவிரியில் கிளம்பிய பூதம் கர்நாடகத்தில் வன்செயலாக வெடித்து அங்கு தமிழர்கள் உட்பட பலர் உயிரிழக்கவும் நேரிட்டு விட்டது. பல கோடி ரூபா பெறுமதியான உடைமைகள் எரித்து, அழித்து நாசமாக்கப்பட்டன; கொள்ளையிடப்பட்டன. அதை அடுத்து அங்கிருந்து சுமார் ஒரு லட்சம் தமிழர்கள் வெறுங்கையுடன் அகதிகளாக— பரதேசிகளாக தமிழகம் போய்ச் சேர்ந்தனர்.

கர்நாடக வன்செயலை தமிழக பத்திரிகைகள் மிகைப்படுத்தி செய்திகள் வெளியிட்டிருந்த போதிலும், நடந்த சம்பவங்களை முற்றாக மறுக்கவும் முடியாது. அங்கு நடந்த அட்டூழியங்களை மறந்துவிடவும் முடியாது.

இந்த நிலையில்—

தமிழக அரசியல் கட்சிகளிடையே காவிரிவிவகாரம் பெரிதாக எதிரொலித்ததாகத் தெரியவில்லை. கட்சிகள் ஒவ்வொன்றும் தங்களுக்கு அரசியல் லாபம் தேடும் வகையிலேயே இந்த விடயத்தைக் கையாண்டு வருகின்றன. ஒற்றுமையாக — ஒரே குரலில் ''போர்க்கொடி'' ஏந்த இது வரை எவரும் முன்வரவில்லை.

பொது மேடைகளிலும், நிகழ்ச்சிகளிலும் தத்தமது கெட்டிக்காரத்தனத்தையும் மேதாவித்தனத்தையும் காட்டும் வகையில் முழங்குவதே தமிழக அரசியல் வாதிகளின் பொழுதுபோக்காக இருந்து வருகிறது.

ஜெயலலிதா தமது 'இமேஜ்' ஐ வளர்த்துக்கொள்வதிலும், அ. தி. மு. கவின் தனி ஆளாகவும் இருக்கவே முனைந்து செயற்பட்டு வருகிறார். ஒருவகையில் பார்க்கும் போது 'சர்வாதிகாரி' போல நடக்கவும் முற்படுகிறார் போல் தெரிகிறது.

அவரின் அரசியல் அணுகுமுறை, போக்கு சற்று வித்தியாசமாகவே தோன்றுகிறது.

அமைச்சர்கள் எம். எல். ஏக்கள் மற்றும் கட்சிக்காரர்களை எல்லாம் அடக்கி, தன்னை மிஞ்சிவிடாமல், தனது காலடியில் வைத்துக் கொள்வதில் அவர் கவனமாக இருந்து வருகிறார். எவரும் சுதந்திரமாக வாய் திறக்க முடியாத ஒரு நிலைமையை அவர் கட்டிக்காத்து வருகிறார்.

கட்சியிலுள்ள மூத்தவர்கள், அனுபவசாலிகள் கூட தமது சொந்தக் கருத்துக்களை வெளியிட முடியவில்லை.

**- அகிலநேசன் -**

அனைவரும் அவரது 'தாசர்களாகவே' இருக்கிறார்கள். எம். எல். ஏக்களில் இருந்து சாதாரண கட்சி உறுப்பினர்கள் வரை அவரின் காலடியில் விழுந்து வணங்கும் 'பக்தர்' களாகவே இருக்கிறார்கள்.

சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா மற்றும் அமைச்சர்கள், எம். எல். ஏக்கள் பலர் தமது பதவிகளை ஏற்கும் போது ஜெயலலிதாவின் காலில் விழுந்து மண்டியிட்டு வணங்கியே ஆசி பெற்றுக் கொண்டனர் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

எம். ஜி. ஆரின் அமைச்சரவையின் செல்வாக்கு மிக்க அமைச்சராக இருந்து, பின்னர் திருநாவுக்கரசு அணியின் முக்கியஸ்தராக இருந்த சாத்தூர் கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், ஜெயலலிதாவின் முதல் அரசியல் எதிரியாகத் திகழ்ந்தவர். மேடைகளில் ஜெயலலிதாவைக் கடுமையாக விமர்சித்தவர்.

அவரே தேர்தலின் பின்னர் கட்சி விட்டு கட்சி மாறி, தனது மனைவியுடன் சென்று ஜெயலலிதாவின் காலில் மண்டியிட்டு வணங்கி ஆசி பெற்றுக்கொண்டார் என்பதும், அதனை பத்திரிகைகள் பலவும் கேவலமாகவும், மோசமாகவும் கிண்டல் செய்து விமர்சித்தன என்பதும் வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

முதலமைச்சரை அவரது கட்சிக்காரர்கள் பூமாதேவி, ஆதிபராசக்தி எனப் ''பட்டங்கள்'' சூட்டி வாயாரப் புகழ்ந்து வருகின்றனர், சாதாரண மக்களைச் சொல்லவும் வேண்டுமா? அவர் செல்லும் இடங்களில் கற்பூர ஆராதனைக் காட்டி கடவுளாக நினைத்து துதிபாடுகின்றனர்.

இந்த 'பூமாதேவி'யும் சில விடயங்களை மிகவும் கவனமாக, நுணுக்கமான முறையிலேயே கையாளுகிறார். அதே சமயம் சில 'சில்லறைத்தனமான' செயல்களிலும் ஈடுபட்டு வருகிறார்.

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட கையோடு பயங்கரவாத தடைச் சட்டமான — 'தடா'வை அமுல் செய்து, காவல்துறையினருக்கு உற்சாகமான, தைரியமான நடவடிக்கைகளை எடுக்க உதவியுள்ளார். அரசியல் எதிரிகளை எச்சரிக்கவும் இந்த 'தடா' பயன்படுத்தப்பட்டு வருகிறது.

'தடா'வைப் பயன்படுத்தும் அதேசமயம் வீண் வம்புகளில் சிக்கிக் கொள்ளாமல் இருப்பதிலும் ஜெயலலிதாவின் கவனம் இருந்தே வருகிறது.

'தடா'வைப் பாவித்து முக்கிய எதிரிகளான தி. மு. கவின் தலைவர்களைக் கைது செய்வதில் கவனமாகவே தமிழக அரசு செயற்பட்டு வருகிறது. சுப்புலட்சுமி ஜெகதீசன் போன்றவர்கள் கைது செய்யப்பட்ட போதும், விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்ததாக அ. தி. மு. கவினரால் குற்றஞ்சாட்டப்படும் கலைஞர் கருணாநிதி, வை. கோபாலசாமி மற்றும் கலைஞரின் மகன் அழகிரி இன்னும் பலரை கைது செய்வதில் காவல்துறையினர் பின்னடிக்கின்றனர். இவர்களைக் கைது செய்தால் தமிழகத்தில் 'கொந்தளிப்பு' வரலாம் என்று ஜெயலலிதா நினைக்கிறார் போலும்!

**ஜெயலலிதாவின் சாகஸம்**

'மினி எமர்ஜென்சி' என வர்ணிக்கப்படும் 'தடா'வை அமுல் செய்து, தமிழகத்தில் உள்ள விடுதலைப் புலிகள் மற்றும் தீவிர போக்குடைய பலரைக் கைது செய்து, அங்கு எழுந்த 'புயலை' சமாளித்து விட்டதாக ஜெயலலிதா கூறி வருகிறார். பெருமைப்பட்டுக் கொள்கிறார்.

விடுதலைப் புலிகளின் கொலைப் பட்டியலில் தமது பெயரும் இருப்பதாகக் கூறி, மக்களை நம்ப வைத்து அவர்களின் அனுதாபத்தை பெறுவதிலும் அவர் சாகஸம் புரிந்து வருகிறார். மத்திய அரசின் அனுமதியுடன் ''கறுப்புப் பூனைகள்'' படையைப் பாதுகாப்புக்காக வைத்துக் கொண்டுள்ளார்.

அவர் செல்லும் பாதைகள், வீதிகளில் மக்கள் போக்குவரத்து செய்ய முடியாதவாறு திடீர் திடீரென தடை செய்யப்படுகின்றன. அவர் செல்லும் இடமெல்லாம் பல நூற்றுக்கணக்கான காவல் துறையினர் படையெடுக்க வேண்டியுள்ளது. இதுவும் அவரின் 'இமேஜ்'ஐ வளர்த்துக் கொள்ள பாவிக்கும் ஒரு 'ஸ்டண்ட்' என்றே கருதப்படுகிறது.

தான் நினைத்ததைச் செய்வதில் அவர் பின்நிற்பதில்லை. அண்மையில் அ தி மு.கவின் மூத்த தலைவர்களில் ஒருவரான கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. க. இராஜாராமை தமது அமைச்சரவையில் இருந்து நீக்கிவிட்டார். கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஊரக தொழில் அமைச்சர் ஜனாப் முகம்மது ஆஸிப் என்பவரையும் வெளியே தள்ளிவிட்டார்.

ஏன், கல்வி அமைச்சர் இராம. வீரப்பன் பொறுப்பில் இருந்த தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத்துறை இலாகாக்களையும் தட்டிப் பறித்து விட்டார்.

செல்வியின் இவ்வாறான அதிரடி நடவடிக்கைகள் எல்லாம் அவரது ராஜதந்திரமா என்பது போகப் போகத்தான் தெரியவரும்.

இப்படியான நிலைமையில் காவிரி நீர் பிரச்சினை மீண்டும் சூடு பிடிக்கத் தொடங்கி உள்ளது.

**காவிரியில் அரசியல் ஆதாயம்**

இந்தப் பிரச்சினையைத் தமது அரசியல் ஆதாயத்துக்காகவே ஒவ்வொரு கட்சியினரும் தூக்கிப் பிடிக்க முன் நிற்கின்றனர். எவரும் தமிழகத்துக்காக — தமிழக மக்களுக்காக காவிரி பிரச்சினையைக் கருத்திற் கொண்டதாகத் தெரியவில்லை.

தமிழக அரசியல் கூட்டாளிகளான காங்கிரஸ்காரரும், அ. தி. மு. கவினரும் உறவில் இப்போது விரிசல் ஏற்பட்டுள்ளது. காவிரி பிரச்சினை இவர்களின் உறவை மேலும் சீர்கெடச் செய்து வருகிறது.

மத்திய அரசிலும் கர்நாடகாவிலும் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருப்பதால், தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி காவிரி பிரச்சினையில் தான் முன்னின்று தீர்த்து வைத்து, தமிழகத்தின் 'கதாநாயகனாக' ஆவதற்குக் கனவு காண்கிறார்.

வாழப்பாடியாரை அவரது ஆதரவாளர்கள் 'காவிரி மைந்தன் என்றே புகழ்பாடத் தொடங்கி விட்டனர்.

கலைஞர் கருணாநிதியும் காவிரி விவகாரத்தை ஜெயலலிதாவோ அல்லது வாழப்பாடியாரோ அல்லது காங்கிரஸ் கட்சியோ தீர்த்து வைப்பதை விரும்பவில்லை என்றே சொல்லவேண்டும்.

அவரது ஆட்சியில் செய்ய முடியாததை வேறு எவரும் தீர்த்து வைப்பதை கலைஞரால் சகித்துக் கொள்ள முடியாது என்பது அவரின் நடவடிக்கைகளில் இருந்து தெரிய வருகிறது. இந்தப் பிரச்சினை நீடித்தால்தான், தானும் அரசியல் மேடைகளில் முழங்கிக் கொண்டிருக்கலாம் என்று நினைக்கிறாரோ தெரியவில்லை.

கலைஞர், வாழப்பாடி எப்படி எல்லாம் தலைகீழாக நின்றாலும், செல்வியும் இந்த விவகாரத்தில், தான் 'கதாநாயகி'யாக— ராணியாக திகழவே விரும்புகிறார்.

இதேவேளை, காவிரி நீர் விவகாரம் குறித்து நாளை [17-2-92] புதுடில்லியில் கர்நாடக முதலமைச்சர் பங்காரப்பாவும், தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவும் முதன் முறையாக பிரதமர் பி. வி. நரசிம்மராவ் முன்னிலையில்மிக முக்கிய பேச்சுக்களை நடத்த உள்ளனர்.

இந்தப் பேச்சுக்கு முன்னோடியாக செல்வி ஜெயலலிதா தமிழகத்தின் அனைத்துக்கட்சி மாநாட்டை சென்னையில் நேற்று கூட்ட இருந்தார். இந்த மாநாட்டில் திரு. கருணாநிதி கலந்து கொள்ள மாட்டார் என்று அவரே அறிவித்துவிட்டார்.

இது கருணாநிதியின் அரசியல் பிற்போக்குத் தனத்தையே காட்டுகிறது. அண்மைக்கால தேர்தலில் படுதோல்வியடைந்த தி. மு. க. விரக்தியடைந்த நிலையில் காணப்படுகிறது ஜெயலலிதாவை தூற்றுவதிலும், அவரது சொந்த வாழ்க்கையைப் பற்றி மிகக் கேவலமாக மேடைகளில் விமர்சிப்பதிலுமே காலத்தை கழித்து வருகின்றது. கலைஞர் இந்த விஷயத்தில் ஓர் அரசியல் கோமாளியாக நடந்து வருகிறார். அவர் தலைமையில் இடம்பெறும் கூட்டங்களிலேயே ஜெயலலிதாவை படு

[6ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வள்ளியம்மை கந்தையா

நயினாதீவு ஐந்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா ஆசாரியாரின் அன்பு மனைவி வள்ளியம்மை 31-01-92 அன்று காலமானார்.

அன்னார் கமலாம்பிகை, நவரத்தினம், பாலயோகினி, இராசரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆறுமுகம், கதிரேசு, நாகரத்தினம், நீலாம்பிகை ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் (நயினாதீவில்) நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

காளிகோவிலடி,
திருநெல்வேலி.

தகவல்:
நாகரத்தினம் பாலயோகினி

(C/1520)

## திரு. A. கோபாலசுந்தரம்
### (கோபால்)

திரு. A. கோபாலசுந்தரம் (கோபால்) காலமானார். அன்னார் எக்ஸ்போ பேணிச்சர் (Pvt) Ltd ஸ்தாபன முகாமையாளரும், காப்புறுதிக் கூட்டுத்தாபன முகவரும், அனலைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற ஐயாத்துரை, தெய்வானைப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருமதி கணேசன், தவமணியின் அன்புச் சகோதரரும், சிவலோகநாயகியின் அன்புக் கணவரும், இலங்கேஸ்வரன், வாசுகி, சிவசுகி, பாலசுகி ஆகியோரின் அன்புத் தகப்பனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [16-2-1992] அவரது திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தாளையடி லேன்,
திருநெல்வேலி.

[19744]

## வல்லிபுரம் சாந்தலிங்கம்

(பிரபல வர்த்தகர், கிராண்ட்பாஸ், கொழும்பு.)

புங்குடுதீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 11 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும், கொண்ட வல்லிபுரம் சாந்தலிங்கம் அவர்கள் 14-2-92 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் தங்கக்குட்டியின் சிரேஷ்ட புதல்வரும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், சாந்தினி, ராகினி ஆகியோரின் தந்தையும், சுரேஸ்குமாரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், தனலெட்சுமி மற்றும் மங்கையர்க்கரசி, திருநாவுக்கரசு (டென்மார்க்), புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவப்பிரகாசம் (அப்போதிக்கரி), இராசரெத்தினம், சாந்தகுமாரி, காலஞ்சென்றவர்களான தர்மபாலன், சௌந்தரராசா மற்றும் இராசலெட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15-2-92 இல் கொழும்பில் நடைபெற்றன.

தகவல்:
திருமதி தர்மபாலன் புனிதவதி
(சகோதரி)

சே. கே. எஷ். வீதி,
நந்தாவில்,
கொக்குவில்.

[19745]

வேலணை

## திருமதி கந்தையா இலட்சுமி

வேலணை 3-ம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தையா இலட்சுமி 14-1-1992 இல் வேலணையில் காலமானார்,

அன்னார் கார்த்திகேசு கந்தையாவின் அன்பு மனைவியும், காலம்சென்ற கார்த்திகேசு - பொன்னுப்பிள்ளையின் மூத்த மருமகளும், காலம்சென்ற கந்தையா - முத்துப்பிள்ளையின் ஒரே மகளும், நவரத்தினம், சீவரத்தினம் [தம்பு], காலம்சென்றவர்களான செல்வரத்தினம், கைலாசபிள்ளை [லெட்சுமி ஸ்ரோர்ஸ், மன்னார்], காலம்சென்ற அன்னலட்சுமி, சிவமணி, சற்குணவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலம்சென்றவர்களான ந. சிவகங்கை, ந. பாக்கியலட்சுமி மற்றும் மனோரஞ்சிதம், முத்துலெட்சுமி, உதயராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், க. சரவணமுத்துவின் அன்புச் சகோதரியும், கா. சபாபதிப்பிள்ளை [புங்குடுதீவு], கா. நடராசா, கா. தம்பிஐயா, காலம்சென்ற செ. நாகபிள்ளை [புங்குடுதீவு], கா. சின்னம்மா [அம்மா], திருமதி ச. பாக்கியலெட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 15-1-1992 இல் வேலணையில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். அன்னாரது துக்க நிகழ்வுகள் 16-2-1992 [இன்று] ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
க. நவரத்தினம் [மகன்]
வேலணை-3.

மெதடிஸ்த மிஷன் பாடசாலை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(19748)

## புதுடில்லி...

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆபாசமான வார்த்தைகளில் சிலர் திட்டுகின்றனர். கலைஞரும் அதனை தலையசைத்து புன்சிரிப்புடன் ரசிக்கிறார். என்ன கேவலமான அரசியல் இது!

இந்த நிலையில் நாளை புதுடில்லியில் கூட்டப்படும் மாநாடு முக்கியமானது மட்டுமல்ல. சரித்திரம் முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூட சொல்லலாம்.

பங்காரப்பா, நரசிம்மராவ், ஜெயலலிதா ஆகியோரின் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் ஒரு மாநாடாகவும் இதனைக் கொள்ளலாம்.

ஜெயலலிதாவைப் பொறுத்தவரையில் சர்ச்சைக்குரிய காவிரிப் பிரச்சினையைத் தீர்த்து வைத்து, தமிழக மக்களின் பாராட்டையும், ஆதரவையும் பெற தன்னாலானதைச் செய்யத் தயங்க மாட்டார். அதே மாதிரி பங்காரப்பாவும் அவரது மாநில மக்களின் ஆதரவைப் பெற்று, அரசியலில் கோலோச்சவே முயல்வார். இந்த இருவரதும் நோக்கம் இதுவாக இருப்பதில் எந்த புதினமோ, ஆச்சரியமோ இல்லை.

அதேசமயம் பிரதமர் நரசிம்மராவ் இந்த விஷயத்தில் பெரும் இக்கட்டான நிலையில் இருக்கிறார். கர்நாடக மாநிலத்தில் அவரது காங்கிரஸ் கட்சி ஆட்சியில் உள்ளது. தமிழகத்தில் ஜெயலலிதாவுடன் காங்கிரஸ் கூட்டு. இந்த நிலையில் பங்காரப்பாவின் ஆதரவையும் இழக்க முடியாது அதேபோல் ஜெயலலிதாவின் ஆதரவையும் உதாசீனம் செய்ய முடியாது. ராவ் இந்த விவகாரத்தில் ''திரி சங்கு சொர்க்க நிலையில்'' விழி பிதுங்கிய நிலையில் இருக்கிறார். பாவம் ராவ்!

நாளை டில்லியில் நடக்கும் மாநாட்டில் பங்காரப்பா, ஜெயலலிதா இருவருமே விட்டுக் கொடுத்து நடப்பார்கள் என்று எண்ணுவதற்கில்லை. இருவரும் தத்தமது நிலையில் இருந்து கீழிறங்கி வருவார்களா என்பதும் சந்தேகமே.

எது எப்படி இருந்தபோதிலும் நாளை நடக்கும் சதுரங்கப் போட்டியில் [புதுடில்லிப் பேச்சில்] சாதுரியமாக காய்களை நகர்த்தி வெல்வது யாரோ? இது சாதாரணப் போட்டி அல்ல அரசியல் சதுரங்கப் போட்டியாகும்.

நரசிம்மராவ், ஜெயலலிதா, பங்காரப்பா ஆகிய மூவரதும் அரசியல் சாணாக்கியத்துக்கு சவாலாக புதுடில்லிப் பேச்சு— காவிரி நீர் விவகாரம்— அமைந்துள்ளது.

பிரதமர் நரசிம்மராவின் அரசியல் வாழ்வை அஸ்தமிக்கச் செய்யும்— அவரை வீட்டுக்கு அனுப்பி வைக்கும் பொல்லாத பேச்சாகவும் புதுடில்லிப் பேச்சு அமைந்துவிடலாம்.

இந்தப் பேச்சில்— சதுரங்கப் போட்டியில் ஜெயலலிதா தந்திரமாக காய்களை நகர்த்தி வெற்றி பெற்றுவிட்டால், அவரை எவரும் அசைக்க முடியாத ஒருநிலை வரும்.

பேச்சு தோல்வியுற்றால் காவிரி விவகாரத்தில் ஜெயலலிதா, ராணி மங்கம்மாவாக மாறுவாரா? அல்லது அவர் சாணக்கியத்துடன் நடந்து தமிழகத்தின் ராணி ஆவாரா?

இல்லாவிடில் —

காவிரி நீர் வெள்ளத்தில் அள்ளுண்டு இந்த விவகாரம் அடித்துச் செல்லப்படுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ★

## எம்முடன்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முகர்களான திரு. இளங்குமரன், திரு, மாறன் ஆகியோரும் நேற்றைய விழாவில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சி [illegible] தலைமையில் [illegible]கும் இடம்பெற்றது. [அ-எ]

## அவதார தினம்

யாழ்ப்பாணம், பெப். 16

ஏழாலை, வசந்தபுரம் வசந்தநாகபூஷணி அம்மன் ஆலய முதல்வர் வசந்தகுமாரி அன்னையின் அவதார தினம் இன்று பக்தர்களினால் கொண்டாடப்படுகிறது.

இன்று காலை எட்டு மணிக்கு ஆலயத்தில் விசேட பூசை, அபிடேகம், பிரார்த்தனை என்பன நடைபெறும். அவற்றைத் தொடர்ந்து சிறப்புச் சொற்பொழிவுகளும் விசேட இசை, தவில் நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

ஆத்மஜோதி நா. முத்தையா, பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர், கலாநிதி சுமணா, திருவாளர்கள் சிவ. மகாலிங்கம், க. நாகேஸ்வரன், வி. ந. நவரத்தினம், எஸ். குமாரசாமி, ஆ. திருமுருகன் உட்பட பலர் சிறப்புரை நிகழ்த்துவர். அன்னையின் அரவணைப்பில் வளரும் குழந்தைகளுக்கும், ஊனமுற்றோருக்கும் இன்று அன்பளிப்புகள் வழங்கப்படும்.

[அ-154]

## கிழக்கில்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களைச் சுற்றிவளைத்த படையினர் அங்கு 12 குடிசைகளைத் தீ மூட்டி எரித்தனர் என்றும், அங்கிருந்து காட்டுப் பகுதிக்குள் தப்பி ஓடிய பொதுமக்கள் மீதும் படையினர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை—

மட்டக்களப்பில் பண்சேனை, போரதீவு, மண்டூர் ஆகிய கிராமங்களைச் சுற்றிவளைத்த படையினர் தமிழ் இளைஞர்கள் பலரை கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-5]

## கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 16

கிராமிய உழைப்பாளர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

உரும்பராய் சிற்றூரவைச் செயலாளர் திரு. ஏகாம்பரநாதன் கூட்டத்துக்குத் தலைமை வகிப்பர். [இ]

## ஒத்திவைப்பு

வட இந்து மகளிர் கல்லூரியில் நாளை நடைபெறவிருந்த முன்னாள் அதிபர் அமரர் செல்வி க. சரவணமுத்துவின் நினைவஞ்சலிக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு பின்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-165]

## விமான...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

குண்டு வெடிப்பில் சேதமுற்ற விமானத்தள கட்டடங்கள் இரண்டாவது உலக யுத்தத்தின் போது பிரிட்டிஷ் விமானப் படையால் கட்டப்பட்டவை என்றும்—

'கொங்கிறீட்' கட்டடங்களான அவை எந்த விமானத் தாக்குதலுக்கும் ஈடு கொடுக்கும் வகையில் கட்டப்பட்டிருந்தன என்றும்—

வடக்கு - கிழக்கு யுத்தத்திற்கு பயன்படுத்தவென சீனக் குடாவில் வைக்கப்பட்டிருந்த 100 கிலோ கொண்ட 50 பீப்பாய் குண்டுகள் ஒரே சமயத்தில் (குண்டு வெடிப்பின் போது) வெடித்து நாசமாகின என்றும் நேற்றைய பி. பி. சி. சிங்கள ஒலிபரப்பில் தெரிவிக்கப்பட்டது. [ஒ-10]


# அராலி மாவத்தை விளையாட்டரங்க நிதிக்காக

200 க்கும் அதிகமான வானொலி நாடகங்களை எழுதிய
அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின்
22 ஆவது மேடை நாடகம்

## "போர் முரசம் கேட்கிறது"

[1981 — 83 காலகட்டத்தைச் சித்திரிக்கும் நாடகம்]

★ இலங்கை வேந்தனின் கதகளி பரதநாட்டியம்
★ அருணா குழுவினரின் இன்னிசை

காலம்: இன்று 16-2-92 மாலை 7 மணி
இடம்: அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்.

அன்பளிப்பு ரூபா 10/-

(19741)



## வடமராட்சி பேருந்து இயக்குனர் சங்கம்
நெல்லியடி — கரவெட்டி.
(750)

# லிகிதர் பதவி வெற்றிடம்

**கல்வித்தகைமை:**
ஆகக் குறைந்தது (க. பொ. த.) சாதாரணம்
(ஆங்கிலம் எழுத, பேசக் கூடியவர்கள் விரும்பத்தக்கது)

**வயது:**
40 வயதிற்கு உட்பட்டவர்கள்

**அனுபவம்:**
லிகிதர் சேவையிலும், போக்குவரத்து சேவையிலும் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

விண்ணப்பங்கள் **16-02-1992** முதல் **22-02-1992** மாலை 5 மணிவரை சங்கக் காரியாலயத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.

நேர்முகப்பரீட்சை எழுத்து மூலம் எம்மால் அறிவிக்கப்படும்.

இ. சுப்பிரமணியம்,
செயலாளர்.

இ. புலேந்திரன்,
தலைவர்.

[5050]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 16-2-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org